சுருக்கம்

ஈரோடு மாநகராட்சி – பாதாள சாக்கடைத் திட்டம்– கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட 18.27 ஏக்கர் நிலம் விலைக்கு வாங்க நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

– – – – – – – – – – – –

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந.6) துறை**

**அரசாணை ( இருபதாண்டு ) எண்.39** **நாள் 7–6–2010**

**(திருவள்ளுவராண்டு 2041**
**வைகாசி மாதம், 24–ம் நாள்**
**படிக்கப்பட்டது.**

1. அரசாணை (நிலை) எண்.249, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11–12–2008
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.9615/2010/மாநஅ3/ நாள் 29–3–2010
3. ஈரோடு மாநகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.இ5.4884/2007 நாள் 22–.3–2010 மற்றும் 3–5–2010

-------

ஆணை:

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஈரோடு மாநகராட்சி அதனைச் சுற்றியுள்ள வீரப்பன் சத்திரம், பெரியசேமூர், காசிபாளையம், சூரம்பட்டி ஆகிய நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளை உள்ளடக்கி ரூ.209.22 கோடி மதிப்பிலான பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் நான்கு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, இரண்டு சிப்பங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கம் செய்யப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது

2) நகராட்சி நிர்வாக இயக்குநர், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், மேற்படி பாதாள சாக்கடை திட்டத்திற்கு அணுகு சாலையுடன் கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஈரோடு வட்டம் பீளமேடு கிராமம் சர்வே எண்.84/1,2,3,4,5,7 85/1,2,3,4,6,7,8, 86/6, 87/2பி, 88/2,3,4, 90/2, 61/2, 62/2,3 ஆகியவற்றில் உள்ள நிலம் தொழில்நுட்ப ரீதியாக கன்சல்டன்ட் நிறுவனத்தினரால் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும், ஈரோடு மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மானம் எண்.1231 நாள் 30–11–2007ல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஈரோடு வட்டம் பீளமேடு கிராமம் நிலை மேற்படி புலங்களில் உள்ள தனியார் நிலங்களை நேரடி பேச்சுவார்த்தை மூலம் அல்லது நிலம் கையகப்படுத்துதல் குழு மூலம் கையகப்படுத்தித் கொடுக்கவும், நிலம் கையகப்படுத்தும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர், மேலும், இந்நிலத்தை விலைக்கு வாங்குவது குறித்து, 10–2–2010 ஆம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற நேரடி பேச்சு வார்த்தையில் ஈரோடு வட்டம் பீளமேடு கிராமம் சர்வே எண்கள். ண்.84/1,2,3,4,5,7 85/1,2,3,4,6,7,8, 86/6, 87/2பி, 88/2,3,4, 90/2, 61/2, 62/2,3 ஆகிய காலைகளில் உள்ள அணுகு சாலையுடன் 18.27 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை ஏக்கர் ஒன்றிற்கு ரூ.6,37,500/– வீதம் நில மதிப்பு மற்றும் அவற்றில் நிலையில் உள்ள மரமதிப்பு ஆகியவற்றிற்கு கீழ்க்கண்டவாறு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

| | |
|---|---|
| நிலமதிப்பு ஏக்கர் 1–க்கு ரூ.6,37,500/– வீதம் 18.27 ஏக்கர் மதிப்பு | ரூ.1,16,47,125/– |
| மரமதிப்பு | ரூ.16,90,511/– |
| மொத்தம் | ரூ.1,33,37,636/– |

4. நகராட்சி நிர்வாக இயக்குநர் தொடர்ந்து மேற்படி மதிப்பு மாவட்ட நிலைக்குழுவின் வரம்பிற்கு மேல் உள்ளதால் சென்னை மாநில அளவிலான குழு நிர்ணயம் செய்ய ஈரோடு மாவட்ட ஆட்சியரால் தனது கடிதம் ந.க.எண்.ஆ1/61583/2008, நாள் 25–2–2010ல் முதன்மை செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையாளர் சென்னை–5 அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்றும், மேற்படி நிலங்களை நேரடி பேச்சு வார்த்தை குழு மூலம் நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பிற்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து விலைக்கு வாங்குவதற்கும், நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பை வழங்குவதற்கும் நிர்வாக அனுமதி வழங்குமாறு ஈரோடு மாநகராட்சி ஆணையர் கோரியுள்ளதாக தெரிவித்து, ஈரோடு மாநகராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தேவையான நிலங்களின் மதிப்பை நிர்ணயம் செய்வதற்கு மாநில அளவிலான குழு நிர்ணயிக்கும் தொகையை எதிர்நோக்கி மேற்படி நிலங்களை தனியாரிடமிருந்து ரூ.1,33,37,636/–க்கு வாங்கிக் கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

5) நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று, ஈரோடு மாநகராட்சியில் அணுகு சாலையுடன் கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க, ஈரோடு வட்டம் பீளமேடு கிராமம் சர்வே எண்கள். 84/1,2,3,4,5,7 85/1,2,3,4,6,7,8, 86/6, 87/2பி, 88/2,3,4, 90/2, 61/2, 62/2,3–ல் 18.27 ஏக்கர் பரப்புள்ள நிலங்களின் மதிப்பை நிர்ணயம் செய்வதற்கு மாநில அளவிலான குழு நிர்ணயிக்கும் தொகையை எதிர்நோக்கி, மேற்படி நிலங்களை தனியரிடமிருந்து ரூ.1,33,37,636/–க்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து வாங்கிக் கொள்ள நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

6) இவ்வாணை வருவாய்த்துறையின் அ.சா.கு.எண்.21151/நிநி2/ 2010–1 நாள் 17–5–2010ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி,
அரசு முதன்மைச்செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 005.
மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம், ஈரோடு.
சிறப்பு ஆணையர், மற்றும் நிலநிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
ஆணையர், ஈரோடு மாநகராட்சி, ஈரோடு.

நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சரின்சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. முதன்மைச் செயலாளரின் தனிச்செயலாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–600 009.
இ.கோ/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.